# தமிழ் இலக்கிய மன்றத் தொடக்க விழா – 10.07.2019

கோயம்புத்தூர் கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்) சார்பில் இலக்கிய மன்றத் தொடக்க விழா கல்லூரிக் கலையரங்கில் 10.07.2019 புதன்கிழமையன்று காலை 11.00 மணியளவில் தொடங்கியது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கோவை அரசு கலைக் கல்லூரியின் தமிழ் உயராய்வுத்துறை உதவிப்பேராசிரியர் **முனைவர் இ.சேனாவரையன்** அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு **தமிழ் இலக்கியமும் வாழ்வியலும்** எனும் பொருண்மையில் சிறப்புரையாற்றினார். அவர் தனது சிறப்புரையின் வாயிலாக, தொல்காப்பியர் காலந்தொட்டு மனிதன் வாழ்வதற்கான அறக்கோட்பாடுகள் பேசப்பட்டு வருகின்றன. சங்க இலக்கியங்களில் காதலும் வீரமும் முதன்மைப்படுத்தப்பட்டன. அந்தக் காதல் வாழ்க்கையிலும் வீர வாழ்க்கையிலும் அறம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதனைத் தொடர்ந்து காப்பியக் காலத்தில் தனி மனித ஒழுக்கத்தோடு சமயமும் வளர்ந்தது. பக்தி இலக்கியங்களில் ஒழுக்க நெறியுடன் பக்தி நெறியும் போதிக்கப்பட்டன. எனவே இன்றைய சூழலில் மாணவர்கள் தங்கள் வாழ்க்கையினை அலைப்பேசி, முகநூல்கள் மூலமாக அழித்துக் கொள்ளாமல் தளரா மனம், தன்னம்பிக்கை ஆகியவற்றைக் கடைப்பித்து வாழ்வைச் சிறப்பாக வாழ வேண்டும் என்றுரைத்தார்.

இந்நிகழ்விற்குக் கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) முனைவர் மா. இலட்சுமணசாமி அவர்கள் தலைமை தாங்கி தலைமை உரையாற்றினார். கல்லூரியின் முதன்மை நிர்வாக அலுவலர் முனைவர் வை. சின்னுசாமி மற்றும் கல்லூரியின் கல்விப்புல முதன்மையர் முனைவர் வே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக இவ்விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சு. அரவிந்த் வரவேற்றுப் பேசினார். தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஆ. சரவணன் நன்றியுரை வழங்கினார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் செய்திருந்தனர். இவ்விழாவில் பல்துறைப் பேராசிரியர்கள், மற்றும் மாணவ – மாணவியர் கலந்து கொண்டனர்.

## நிழற்படங்கள்








## பத்திரிக்கைச் செய்தி

# தேசிய நூலக தின விழா – 24.09.2019

கோயம்புத்தூர் கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்) சார்பில் **தேசிய நூலக தின விழா**க் கொண்டாடும் முகத்தான் கல்லூரி மாணவ – மாணவியருக்கான **வினாடி – வினாப் போட்டி**க்கு **07.08.2019**, புதன்கிழமையன்று ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. போட்டியில் 110 மாணவ – மாணவியர் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். முதல் சுற்றானது எழுத்துத் தேர்வு மூலம் நடத்தப் பெற்று 20 பேர்

தேர்வு செய்யப் பெற்றனர். தேர்வானவர்கள் குழுவிற்கு நால்வர் வீதம் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, அவர்களுக்கு இரண்டாம் மற்றும் இறுதிசுற்று நடைபெற்றது. இதில் முதலிடம், இரண்டாமிடம் மற்றும் மூன்றாமிடத்திற்குரியவர்கள் தேர்வு செய்யப் பெற்றனர்.

இப்போட்டிக்கான பரிசளிப்பு விழாக் கல்லூரி கருத்தரங்க அறையில் **24.09.2019, செவ்வாய்க்கிழமை**யன்று பிற்பகல் 03.00 மணியளவில் தொடங்கியது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் **முனைவர் கோ. புவனேஸ்வரி** அவர்கள் கலந்து கொண்டு **"நூலகம் போற்றுதும் நூலகம் போற்றுதும்"** என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார். அவர் தனது சிறப்புரையில், "அறிஞர்களும் மேதைகளும் உருவாவதற்கு அடிப்படைக் காரணம் மாபெரும் அறிஞர்களின் பொன்மொழிகள்தாம். அவைகளைத் தேடிக் கண்டறிந்து பயில வேண்டும். நூல்கள்தான் ஒருவருக்குச் சிறந்த தோழனாக இருக்க முடியும். ஏனென்றால் ஒருவருக்கு வாழ்க்கையில் இன்ப – துன்பம் வரும்பொழுது அவற்றைச் சரியான வகையில் கையாளத் தகுந்த வழிமுறைகளைத் தந்து அவனை நெறிப்படுத்துவதாக நூல்கள் விளங்குகின்றன. அதுமட்டுமின்றி நூல்கள் வாசிப்பதால் மாணவர்களாகிய உங்களின் நினைவாற்றல் பெருகும் என்பது உண்மை. இதனை நன்கு உணர்ந்து கொண்டவர்கள்தான் இன்று உலகம் போற்றும் அறிஞர்களாகப் புகழப்படுகின்றனர். சான்றாக அரிஸ்டாட்டில் தனக்கு விஷம் வழங்கப்பட்ட பின்பும் நூல் வாசிப்பதைத் தொடர்ந்து செய்து கொண்டுதான் இருந்தார் அறிஞர் அண்ணா தனக்கு அறுவை சிகிச்சைத் தொடங்கப் போகும் சில நிமிடங்களுக்கு முன்பு வரை நூல் வாசிப்பதை நிறுத்தவில்லை. சிறையில் தூக்கிலிடப்படும் நேரத்திற்கு முன்பாக நூல் வாசிப்பதை விருப்பத்துடன் செய்தார். இவ்வாறு நிறைய சான்றுகளைக் காட்ட முடியும். ஆனால் ஒன்றை மட்டும் மறவாதீர்கள்... இன்று உங்கள் கைகளில் அலைபேசி என்ற தகவல் தொழில்நுட்ப சாதனம் உள்ளது. இதில் நூல்களைத் தரவிறக்கம் செய்து படிப்பது என்பது அயற்சியைத் தருவதோடு கண்களுக்கும் பாதிப்பினை ஏற்படுத்தும். எனவே நகல் எடுப்பதை விட்டு நூல்களை வாங்கியோ அல்லது நூலகத்திற்குச் சென்றோ வாசித்து பழகுங்கள். அப்போதுதான் உண்மையான வாசிப்பு அனுபவத்தைப் பெற இயலும். எனவே இன்றைய நாளிலிருந்து தினமும் ஒரு அரை மணி நேரமாவது நூல்களை வாசிப்பது என்பதை பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்" என்று நூல் வாசிப்பை அறிவுறுத்தி மாணவர்களிடத்துப் பேசினார்.

இந்நிகழ்விற்குக் கல்லூரியின் முதல்வர் **முனைவர் ம. லட்சுமணசாமி** அவர்கள் தலைமை தாங்கி தலைமை உரையாற்றினார். கல்லூரியின் முதன்மை நிர்வாக அலுவலர் **முனைவர் வை. சின்னுசாமி** அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி நூலகர் **முனைவர் ஆர். செந்தில்குமார்** மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர் க. முருகேசன்** முன்னிலை வகித்தனர். முன்னதாக இவ்விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு) **முனைவர் சு. அரவிந்த்** வரவேற்றுப் பேசினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் **முனைவர் க. பழனிவேல்** நன்றியுரை வழங்கினார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்கள் செய்திருந்தனர். இவ்விழாவில் தமிழ்த்துறை, பிற துறைப் பேராசிரியர்கள், பல்வேறு துறைகளைச் சார்ந்த இலக்கிய மன்ற மாணவ – மாணவியர் என 230-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# நிழற்படங்கள்


தமிழ் இலக்கிய மன்றம்
Shot on OnePlus


KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE
COIMBATORE - 641 029. T.N., INDIA.


KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE
COIMBATORE - 641 029. T.N., INDIA.
தமிழ் இலக்கிய மன்றம்
தேசிய நூலக தின விழா - பரிசளிப்பு விழா

# பாரதி பிறந்த நாள் விழா – 13.12.19

கோயம்புத்தூர் கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்) சார்பில் பாரதியார் பிறந்த நாள் விழாக் கல்லூரி கருத்தரங்க அறையில் 13.12.2019, வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 2.00 மணியளவில் தொடங்கியது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகப் பொள்ளாச்சி இலக்கிய வட்டத்தைச் சார்ந்த **கவிஞர் இரா.பூபாலன்**, அவர்கள் கலந்து கொண்டு **“பாரதி என்னும் பெருங்கவிதை”** எனும் பொருண்மையில் சிறப்புரையாற்றினார். அவர் தனது சிறப்புரையின் வாயிலாக, ‘மனிதன் எழுத்து வடிவத்திற்குக் கொடுத்த மிகப் பெரிய மரியாதை கவிதை. பாரதிக்கு முன் மகாகவி கம்பர். கம்பருக்குப் பின் பல நூற்றாண்டுகளைக் கடந்து பாரதி மகாகவியாகத் தோன்றினான். அதற்குப் பின் இன்னும் யாரும் பிறக்கவில்லை. பாரதி பாரதியையும் கவிதையையும் பிரிக்க இயலாது. கவிதையைப் பற்றி பேசம் போதெல்லாம் பாரதியைத் தொட்டுத் தான் பேச முடியும். பாரதி அன்பு செய்த மகா கலைஞன். மானுடம் பாடிய கவிஞன். பாரதியைப் படியுங்கள்’ என்று மாணவர்களிடத்துப் பேசினார். பின்பு, பாரதி பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கவியரங்கில் கலந்து கொண்ட மாணவர்கள் கவிதையை வாசித்தளித்தனர்.

இந்நிகழ்விற்குக் கல்லூரியின் முதல்வர் முனைவர் வி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கி தலைமை உரையாற்றினார். கல்லூரியின் முதன்மை நிர்வாக அலுவலர் முனைவர் வை. சின்னுசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக இவ்விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சு.அரவிந்த் வரவேற்றுப் பேசினார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் க. பழனிவேல் நன்றியுரை வழங்கினார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைத் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்கள் செய்திருந்தனர். இவ்விழாவில் தமிழ்த்துறை, பிற துறைப் பேராசிரியர்கள், பல்வேறு துறைகளைச் சார்ந்த இலக்கிய மன்ற மாணவ – மாணவியர் என 250-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## புகைப்படங்கள்




KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE
இலக்கிய மன்றம்
விழா


KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE
COIMBATORE - 641 029. T.N., INDIA.
Estd. 1973
இலக்கிய மன்றம்
விழா